தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்
13.9.2023 (புதன்கிழமை)

## ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில்

# காது, மூக்கு, தொண்டை டாக்டர்களுக்கு பயிலரங்கு

புதுச்சேரி, செப்.13-

ஜிப்மர் மருத்துவக் கல்லூரியில் காது, மூக்கு, தொண்டைத் துறையில் முதுகலை பட்டதாரிகளுக்கான (டாக்டர்கள்) 2 நாள் பயிலரங்கு நடந்தது. இதில் பல்வேறு மருத்துவக்கல்லூரிகளில் இருந்து 50 டாக்டர்கள் பங்கேற்றனர். அப்போது முதல் நாள் செவியியல், உமிழ்நீர் சுரப்பி, தைராய்டு, குரல் வளை புற்றுநோய் தொடர்பான பாதிப்புகள் பற்றி கலந்துரையாடல் நடந்தது.

டாக்டர்கள் அருண் அலெக்சாண்டர், மேரி குரியன், சுனில் குமார் சக்சேனா, பிரபு, சிவராமன், சிதானந்தகுமார், கலையரசி, லோகேஷ் ஆகியோர் வழிகாட்டுதல்களை வழங்கினார்கள். 2-வது நாள் ஒலியியல், சைனஸ், எலும்பு கதிரியக்கவியல், கழுத்துப்பகுதி கதிரியக்கவியல் குறித்தும் டாக்டர்கள் விரிவாக விளக்கம் அளித்தனர். தொடர்ந்து வினாடி-வினா போட்டியும் நடந்தது.